# JAT Loyalty **திட்டத்தின் விதிமுறைகளும் நிபந்தனைகளும்**

1. இலங்கையில் வசிக்கும் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட, தனது தேசிய அடையாள அட்டையின் கீழ் பதிவு செய்யப்பட்ட செல்லுபடியாகும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்தைக் சமர்ப்பித்து அதனை பேணக்கூடிய அனைத்து நபர்களும் இத்திட்டத்தின் கீழ் அங்கத்தவர்களாவதற்கு தகுதி பெறுவர். ஒரு தேசிய அடையாள அட்டையின் கீழ் ஒரு அங்கத்தவர் மட்டுமே இத்திட்டத்திற்குப் பதிவு செய்திட முடியும்.

2. முதன்முதலில் SMS அனுப்பப்படும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்தைக் கொண்டே இந்தத் திட்டத்திற்கான பதிவும் அங்கத்தவரை அடையாளங்காண்பதும் மேற்கொள்ளப்படும். நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச புள்ளிகளை ஈட்டிய பின்னர், அங்கத்தவரின் விபரங்கள் செயலியில் உள்ளீடு செய்யப்படும்.

3. நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள தயாரிப்புகளுக்கு ஏற்ப லோயல்டி புள்ளிகள் வழங்கப்படும். 2026.10.01 ஆம் திகதியன்று புள்ளிகள் வழங்குதல் பின்வருமாறு அமைந்திடும்.

| | செயர்லெக் வோட்டர் பேஸ் | மாஸ்டர்ஸ் ஸ்டெய்ன் / டொப் கோட் | மாஸ்டர்ஸ் ஓல் இன் வன் |
|---|---|---|---|
| 1L | 500 | 100 | |
| 2.5L | 1000 | | |
| 4L | 2000 | 400 | 150 |
| 5L/ 6L | 2000 | | |
| 25L | 5000 | | |

4. ஈட்டப்படும் ஒவ்வொரு புள்ளியும் 1 ரூபாய்க்கு சமமானதாகும். ஒரு அங்கத்தவர் நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச புள்ளிகளை ஈட்டிய பின்னர், அவர் கொமர்ஷல் வங்கியில் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு தகுதி பெறுவார். அத்துடன் JAT இன் உள் வாடிக்கையாளர் சரிபார்ப்பு நடைமுறைக்கு அமைவாகவும், கொமர்ஷல் வங்கியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கவும் கொமர்ஷல் வங்கியின் டெபிட் கார்ட் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதி பெறுவார்.

5. கணக்கை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில், அங்கத்தவர் தனது அங்கத்தவர் கணக்கில் ஈட்டியுள்ள போனஸ் புள்ளிகளுக்கு சமமான ஆரம்பக் கணக்கு மீதி இருப்புத் தொகையொன்று (பணமாக) அவரது கணக்கில் வரவு வைக்கப்படும்.

6. ஆரம்பப் புள்ளிகள் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டதன் பின்னர், ஒவ்வொரு வாரமும் ஈட்டப்படும் போனஸ் புள்ளிகளுக்கு சமமான தொகையானது, அதற்கு அடுத்த வாரத்தில் வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறும் முதல் பதினைந்து நாட்களுக்குள் வழங்கப்பட்டுள்ள கொமர்ஷல் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

7. JAT நிறுவனத்தின் ஊழியர்கள், சில்லறை வியாபாரிகள், விற்பனை உதவியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் ஆகியோர் இத்திட்டத்தில் பங்கேற்பதற்கு தகுதி பெறமாட்டார்கள்.

8. முன்னறிவித்தலுடனோ அல்லது முன்னறிவித்தல் இன்றியோ இந்த லோயல்டி திட்டத்தின் விதிமுறைகள், புள்ளிகள் மற்றும் ஈட்டப்பட்ட புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப தீர்மானிக்கப்படும் வாடிக்கையாளர் நிலைகளை மாற்றுவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், சிறியளவில் திருத்துவதற்கும் அல்லது ரத்து செய்வதற்கும் JAT நிறுவனத்திற்கு முழு உரிமை உண்டு. (இது புள்ளிகளின் பெறுமதியிலோ அல்லது பரிசுகளைப் பெற்றுக்கொள்வதிலோ தாக்கத்தை ஏற்படுத்தினாலும் கூட)

9. லோயல்டி திட்டத்தின் தயாரிப்புகளுக்கான போனஸ் புள்ளிகளின் பெறுமதியை எவ்வித முன்னறிவித்தலும் இன்றி மாற்றுவதற்கான உரிமையை JAT நிறுவனம் மேலும் தக்கவைத்துக்கொள்கிறது. (விடயம் 03 ஐப் பார்க்கவும்).

10. புள்ளிகள் சேகரிப்பானது திட்டத்தின் விதிமுறைளுக்கு உட்பட்டதாக அமையும். ஒவ்வொரு அங்கத்தவரும் தங்களின் உரிமைகள், பொறுப்புகள், லோயல்டி திட்டத்தின் நிலை மற்றும் போனஸ் புள்ளிகளை ஈட்டுவதற்கான கட்டமைப்பு பற்றிய புரிதலைப் பெற்றுக்கொள்வதற்காக, இத்திட்டத்தின் விதிமுறைகள், தகவல் துண்டுப்பிரசுரங்கள் மற்றும் அறிவித்தல்களைப் படித்துப் பார்ப்பதற்குப் பொறுப்புடையவராவர்.

11. ஒவ்வொரு நிதியாண்டின் இறுதி நாளிலும், அதற்கு முந்தைய நிதியாண்டிற்குள் குறைந்தபட்ச அடிப்படைப் புள்ளிகளை ஈட்டியிருந்தும் தங்கள் கணக்கைச் செயற்படுத்தாத வாடிக்கையாளர்களின் போனஸ் புள்ளிகள் ரத்து செய்யப்படும். இந்நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்னர், ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 31 ஆம் திகதி முதல் குறுஞ்செய்திகள் (SMS) மூலமாகவும், நிறுவனத்தின் விற்பனை மற்றும் தொழில்நுட்பப் பிரிவின் மூலமாகவும் வாடிக்கையாளருக்கு அது குறித்து அறிவிக்கப்படும். அத்துடன் கணக்கைச் செயற்படுத்துவதற்காக மார்ச் 31 ஆம் திகதி வரை 3 மாத கால அவகாசம் வழங்கப்படும். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில், அதுவரை ஈட்டப்பட்ட அனைத்து போனஸ் புள்ளிகளையும் ரத்து செய்வதற்கான உரிமை நிறுவனத்திற்கு உண்டு.

12. ஏதேனும் ஒரு வாடிக்கையாளரை/அங்கத்தவரை எந்நேரத்திலும் இந்த லோயல்டி திட்டத்திலிருந்து நீக்குவதற்கும் அல்லது ஒரு வாடிக்கையாளரின்/அங்கத்தவரின் பதிவை ரத்து செய்வதற்குமான முற்றுமுழுதான உரிமையை JAT நிறுவனம் மேலும் தக்கவைத்துக்கொள்கிறது.

13. ஏதேனும் ஒரு அங்கத்தவரின் அங்கத்துவம் தற்காலிகமாக நிறுத்தப்படும் போது அல்லது ரத்து செய்யப்படும் போது, அவரது லோயல்டி போனஸ் புள்ளிகள் யாவும் ரத்து செய்யப்படும் என்பதுடன், அங்கத்தவரால் அந்தப் போனஸ் புள்ளிகளை பெற்றுக்கொள்ள முடியாது.

14. சேகரிக்கப்பட்ட போனஸ் புள்ளிகளை வேறு எந்தவொரு பரிசுகளுக்காகவும் பரிமாற்றிக்கொள்ள முடியாது என்பதுடன்,

கடன் செலுத்தலுக்கு பதிலாக வழங்கவும் பயன்படுத்த முடியாது. மேலும், போனஸ் புள்ளிகளை வேறு அங்கத்தவர்களுக்கு மாற்றவும் முடியாது.

15. JAT நிறுவனம் தனது முற்றுமுழுதான விருப்பத்திற்கு இணங்க, எந்நேரத்திலும் இந்தத் திட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கோ, ரத்து செய்வதற்கோ அல்லது முடிவுக்குக் கொண்டுவருவதற்கோ ஆன தனது உரிமையை மேலும் தக்கவைத்துக்கொள்கிறது. அத்துடன் இது குறித்து அங்கத்தவருக்கு நியாயமான முறையில் அறிவிக்கப்படலாம்.

16. வழங்கப்படும் எந்தவொரு வகையான பரிசுகள் தொடர்பிலோ அல்லது அவற்றை மீட்டுக்கொள்வதற்குத் தேவைப்படும் JAT லோயல்டி போனஸ் புள்ளிகளின் எண்ணிக்கை தொடர்பிலோ மாற்றங்களைச் செய்வதற்கான உரிமை JAT நிறுவனத்திற்கு உண்டு. அத்தகைய ஏதேனும் மாற்றங்கள் நிறுவனத்தின் இணையதளத்தில் காட்சிப்படுத்தப்படும்.

17. செயற்படுத்தப்பட்ட JAT கொமர்ஷல் வங்கி லோயல்டி டெபிட் கார்ட் காலாவதியானால், திருடப்பட்டால் அல்லது தொலைந்து போனால், அது குறித்து எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு விரைவாக வங்கிக்கு அறிவித்து புதிய கார்ட் ஒன்றைப் பெற்றுக்கொள்வது அங்கத்தவரின் பொறுப்பாகும். மேலும் புதிய கார்ட் ஒன்றை வழங்குவதற்கான செலவை அங்கத்தவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

18. வாடிக்கையாளர் தமக்கு வழங்கப்பட்ட வங்கிக் கார்ட்டை செயற்படுத்தாமல் தன் வசம் வைத்திருக்கும் போது அது காலாவதியாகிய சந்தர்ப்பங்களிலோ அல்லது அது தொலைந்துபோன சந்தர்ப்பங்களிலோ, வாடிக்கையாளர் மீண்டும் ஒரு புதிய கார்ட்டைப் பெற்றுக்கொள்ள விரும்பினால், அவர் முற்றிலும் புதிதாக 10,000 போனஸ் புள்ளிகளை மீண்டும் ஈட்டிக்கொள்ள வேண்டும்.

19. ஏதேனும் ஒரு அங்கத்தவர் வங்கிக்குத் தவறான தகவல்களை வழங்கியமையின் காரணமாக, வங்கியினால் முன்வைக்கப்படும் எந்தவொரு உரிமைகோரல்களுக்கும் எதிராக, அங்கத்தவர்கள் JAT நிறுவனத்திற்கு இழப்பீடு வழங்குவதற்கு இதன் மூலம் உடன்படுகின்றனர்.

20. ஏதேனும் ஒரு மூன்றாம் தரப்பினர் JAT நிறுவனத்திற்கு எதிராக முன்வைக்கும் எந்தவொரு உரிமைகோரல்களுக்கும் எதிராக, அங்கத்தவர்கள் JAT நிறுவனத்திற்கு இழப்பீடு வழங்குவதற்கு இதன் மூலம் உடன்படுகின்றனர்.

21. ஒரு அங்கத்தவர் குறியீடுகளை அனுப்புவதற்காக அதிகபட்சமாக இரண்டு கையடக்கத் தொலைபேசி இலக்கங்களை மட்டுமே செயற்பாட்டு நிலையில் வைத்திருக்க முடியும். அங்கத்தவரின் விருப்பத்திற்கிணங்க செயலிழக்கச் செய்யப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கங்கள் மூலம் மீண்டும் குறியீடுகள் அனுப்பப்பட்டால், அந்தப் போனஸ் புள்ளிகளை ரத்து செய்வதற்கான உரிமை JAT நிறுவனத்திற்கு உண்டு.

22. சிதைந்த அல்லது சேதமடைந்த குறியீடுகளுக்கான இரகசியக் குறியீட்டை வழங்குவது, ஒரு விற்பனைப் பிரதிநிதியின் உறுதிப்படுத்தலின் அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

23. JAT லோயல்டி திட்டத்தின் பிரதான ஒருங்கிணைப்பு தொலைபேசி இலக்கம் 0117524150 ஆகும்.